திரு. என். கிட்டப்பா : இதுபோல் ஒவ்வொரு ரேஞ்சிலும் டி.ஐ.ஜி. அலுவலகத்திலும் ஓர் அதிகாரி நியமிக்கப்படுவதற்கான யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது தேவைப்படுகிறதா என்று பார்த்து அதற்குப் பிறகு முடிவெடுக்கப்பட வேண்டிய விஷயம் ஆகும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, 'போலீஸ்' என்றால் கொஞ்சம் அச்சம் இருக்க வேண்டும் மனத்திலே. இப்படி ரொம்பவும் அதிகமாகப் பொதுமக்களிடத்தில் தொடர்பு கொண்டால் அந்த அச்சம் எடுபட்டுப் போகிறது. ஆகவே, அந்தத் தொடர்பை ஓரளவு நிறுத்திவிடுவதுகூட நல்லது என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்.

THIRU K. VINAYAKAM : What exactly are the functions of this Public Relations Officer ? Is he just to act as a Post Office to receive petitions and then forward them to the concerned authorities ? Or, is he empowered to take any decision on papers on which he is not entitled to take a decision ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பத்திரிகைகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளவும், வகுப்புக் கலவரங்கள், பிற நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப்பற்றிய அதிகாரபூர்வமான செய்திகளை வெளியிடவும், பொதுமக்களின் கோரிக்கைகளை நேரில் பெற்றுக் கொள்ளவும் போன்ற காரியங்களுக்காக அவர்கள் பயன் படுகின்றார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் இப்படி அதிகாரிகள் நியமிக்கப்படுவது இயலாது என்கிற காரணத்தினால் ஆங்காங்கு புகார்ப் பெட்டிகள் வைக்கவேண்டும் என்ற யோசனை இருந்ததே, அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியொரு யோசனை இருந்திருக்குமானால் அதை மீண்டும் பரிசீலிக்கச்சொல்லி, அதற்கு ஆவன செய்ய இந்த அரசு தயாராக இருக்கும்.

Duty Officer in Secretariat.

* 310 *Q.*—THIRU K. VINAYAKAM
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR

Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government have introduced a new system of nominating an I.A.S. Officer as 'Duty Officer' in Secretariat Buildings to attend to matters of 'Important and Emergent' nature ; and

(*b*) when this system comes to effect ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) செயலகப் பணியாளர்களின் ஒழுங்கு முறையை உயர்த்தவும், கட்டடங்களைப் பேணி வரவும், உடனடி முக்கியத்துவம் வாய்ந்த செயல்களைச் கவனிக்கத் துணை புரியவும் செயலகத்தில் இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ. ஏ. எஸ்.) தகுதிபெற்ற அரசின் உதவிச் செயலாளர், (Under Secretary) அரசுத் துணைச் செயலாளர் (Deputy Secretary) தரத்திலுள்ள அதிகாரிகளை ஒவ்வொரு நாளும் "அலுவல் அதிகாரிகளாக" (Deputy Officer) அரசு நியமித்துள்ளது.

(இ) இந்த ஏற்பாடு 1-12-1969 முதல் செயலுக்கு வந்துள்ளது.

திரு. கே. விநாயகம் : சார், ஒரு தனி நபர் ஒரு டிபார்ட்மெண்டினுடைய செக்ரடரியைப் பார்க்க வேண்டும், அவரிடம் தகவல் சொல்ல வேண்டும் என்று நினைத்தால் அவர் இந்த டியூடி ஆபிசரிடம் போய் அனுமதி வாங்கிக் கொண்டுதான் அந்த கன்ஸர்ண்டு ஆபிசரைப் பார்க்கப் போகவேண்டுமா ? அல்லது, அவர் நேரடியாகவே போய்ப் பார்ப்பதற்கு அனுமதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவருடைய அனுமதி வாங்கிக்கொண்டுதான் போகவேண்டும் என்று இல்லை. ஆனால் வெளியிலிருந்து அதிகமான பேர் அனுமதி இல்லாமல் உள்ளே வந்து கொண்டு, தாழ்வாரங்கள் போன்றவைகளில் இருந்து கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்காக இந்த அதிகாரி முயற்சிகள் எடுத்துக் கொள்ளுகின்றார்.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state the number of persons, whether they are staff or third parties, who have been found fault with by these special Duty Officers so far for dereliction of duty or for improper conduct ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதிலே பொறுப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றவர்கள், நான் முதலில் எடுத்துக் காட்டியதைப் போல, அண்டர் செக்ரடரி, டெபுடி செக்ரடரி என்கிற அளவிலேதான் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களால் பிடிபட்டவர்களின் எண்ணிக்கை விவரம் இல்லை.

மேட்டூர் ஊழியர்களுக்கு குடிநீர்த் திட்டம்.

* 311 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அருகாமையில் உள்ள ராமமூர்த்திநகர், கருமலைக்குடல், புதுசாம்பள்ளி போன்ற ஊர்களில் குடிநீருக்கான திட்டம் ஏதாவது அரசாங்கத்திட்டம் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அது எப்பொழுது அமலுக்கு வரும் ?